SRI SANKARA ARTS AND SCIENCE COLLEGE
Autonomous
A Unit of Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust
and Affiliated to University of Madras / Accredited by NAAC with 'A' Grade
ENATHUR, KANCHIPURAM - 631 561.
Phone : 044 - 27264066
Mail : admin@sankaracollege.edu.in Website : www.sankaracollege.edu.in

15/11/2022

# MINUTES OF MEETING OF THE BOARD OF STUDIES

**Department:** Tamil

**Venue:** P17

**Date:** November 15th, 2022

**Agenda:** Suggestions of Methodologies for Innovative Teaching in the Department and Panel of Names to the Academic Council for Appointment of Examiners.

**The following members were present in the meeting:**

1. **Dr. G. PALANI,** M.A., M.Phil.,Ph.D Professor and Head, Department of Tamil Literature, University of Madras, Chennai - 5- External Subject Expert Member nominated by the Vice-Chancellor
2. **Dr. J. RADHAKRISHNAN,** M.A., M.Phil., Ph.D. Assistant Professor & Head, Department Of Tamil, Sri SankaraArts and Science College, Enathur, Kanchipuram - Chairman.
3. **Dr. G. JAYASHREE,** M.A., M.Phil., Ph.D. Assistant Professor, Department Of Tamil, SriSankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.
4. **Mr.S. NEELAMEGAN,** M.A., M.Phil., Assistant Professor, Department Of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.
5. **Dr. N. APPADURI,** M.A., M.Phil., Ph.D., Assistant Professor, Department Of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.
6. **Dr. M. ANBAZHAGAN,** Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member
7. **Mr. K. SARAVANAN,** No. 3 Main road, Dhamal vilagae, Kanchipuram - 631 551. - U.G.Graduate Alumnus

15/11



Scanned with OKEN Scanner

8. **Dr. K.R. VENKATESAN,** Principal, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram - Special invitee

**The following members could not attend the meeting due to their prior commitments and were granted leave of absence:**

1. **Nil**

முந்தைய பாடத்திட்டக்குழுக் கூட்டங்களின் பரிந்துரைகளின்படியும் மாற்றியமைக்கப்பெற்றுள்ள சென்னைப் பல்கலைக்கழக மொழிப் பாடத் திட்டத்தைத் தழுவியும் புதிய சூழல்களையும் பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் தமிழ்நாடு அரசு உயர்கல்வி மன்றப் பரிந்துரைகளின் படியும் மத்திய, மாநில அரசுகள் நடத்தும் பல்வேறு போட்டித்தேர்வுகளின் பாடத்திட்டங்களைக் கருத்தில்கொண்டும் உருவாக்கப்பெற்ற புதியப்பாடத்திட்டங்கள் குறித்தும் அதன் முதல்பருவ பின்னூட்டங்களையும் இப்பாடத்திட்டக் குழுவில் முதன்மையாக கவனத்தில் கொண்டு விவாதிக்கப்பட்டது.

இளநிலைப் பாடப்பிரிவுகளில் ஓராண்டு மொழிப்பாடம் பயிலுவோரும் ஈராண்டுமொழிப்பாடம் பயிலுவோருமாக இருவேறுபட்ட திறத்தாருக்கும் ஒரே மொழிப்பாடத்தை அமைக்கும்போது ஓராண்டு மொழிப்பாடம் பயிலுவோர் சில இன்றியமையாத மொழி வளமைகளை அறிமுக அளவிலும் பெறாமல் இழந்துவிடுகின்றனர். எனவே, அவ்விரு பிரிவினருக்கும் முழுமையான அளவில் மொழிப்பாட நோக்கங்கள் சென்று சேரும் வகையில் புதிய பாடத்திட்டத்தில் **இரு பருவ மொழிப்பாடம், நான்கு பருவ மொழிப்பாடம்** என இரண்டு தனித்தனியே பிரித்து உருவாகப்பெற்றது. அது, *2022-23* ஆம் கல்வியாண்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பெற்றுவருகிறது. தமிழக அரசு போட்டித்தேர்வுகளில் தமிழ்த் தாள் கட்டாயமாக்கப் பெற்ற சூழலில் இப்புதியப் பாடத்திட்டம் அனைத்து துறை மாணவர்களுக்கும் சம அளவில் பலனளிக்கக்கூடியது என உறுப்பினர்களால் பாரட்டப்பெற்றது.

இதே நிலையில், தமிழக அரசு அனைத்து இளங்கலை பாடங்களுக்கும் நான்கு பருவ மொழிப்பாடம் அறிமுகப்படுத்த முடிவுசெய்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது. மேலும், அனைத்துப்பல்கலைக்கழகத்திற்கும் பொதுவான பாடத்திட்டம் ஒன்று உருவாக்கப்பெற்றுவருவதாகவும் அறியவருகிறது. எனவே, இருவகையான (*4TL, 2TL*) புதிய பாடத்திட்டங்களிலும் எந்த மாற்றங்களையும் தற்போது செய்ய வேண்டாம் என முடிவுசெய்யப்பெற்றது. தமிழ் நாடு அரசு வெளியிடும் புதிய பாடத்திட்டத்திற்குத் தக நான்கு



15/11

Scanned with OKEN Scanner

பருவப்பாடத்திட்டத்திலேயே மாற்றங்களைச் செய்து, பின்னர் மொழிப்பாட நூலாக்கப்பணியையும் மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டது.

மொழிப்பாடத்திற்கு ஒரு பாடத்திற்கு ஓர் ஆசிரியர் என்றுதான் அமைக்க வேண்டும் என அவசியம் இல்லை. மொழிப்பயிற்சி, படைப்பூக்கம் ஆகியவற்றிற்கு என தனி நிபுணத்துவம் பெற்ற ஓரிரு ஆசிரியர்கள் எல்லா மாணவர்களுக்கும் செல்லும் வகையில் கலந்தும் பாடம் எடுக்க வழிவகை செய்யலாம். இதன்மூலம் மாணவர்களின் கற்றல் ஆற்றலை மேம்படுத்துவதுடன் ஆசிரியர்களின் திறன்களையும் முழுமையாகப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும் என்ற கருத்து முன்வைக்கப்பெற்றது. இக்கருத்து, எதிர்காலத்தில் தேவைக்குத்தக கருத்தில்கொள்ளலாம் என முடிவுசெய்யப்பெற்றது.

முதலாமாண்டு மாணவர்களின் சேர்க்கை நாட்கள் முன்பின் அமைவதால் முதற்பருவத்தின் பாடத்திட்டம் அளவு குறைக்கப்பட வேண்டும். இதனால் மாணவர்கள் முதற்பருவ தேர்வில் மனக்குழப்பமின்றி செயல்படுவர் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது. அரசின் புதிய பாடத்திட்டத்திற்குப் பிறகான திருத்தத்தில் இது, கருத்தில்கொள்ள ஒப்புக்கொள்ளப்பெற்றது.

இளங்கலை, முதுகலை பட்ட மாணவர்களுக்கான பாடங்களுள் தமிழ் இலக்கிய வரலாறு மற்றும் தமிழக வரலாறு போன்ற பாடங்களுக்கு புதிய பாடத்திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமை பாராட்டப்பெற்றது.

இளங்கலை மூன்றாமாண்டு மாணவர்களுக்கான ஐந்தாம் பருவ பாடத்திட்டத்தில் உள்ள மதிப்புக்கல்வி [Value Education] பாடம் முதலாம் பருவத்திற்கு மாற்றப்பட வேண்டும். இதனால் மதிப்புக்கல்வி குறித்த புரிதல் மாணவர்களிடத்தில் அதிகம் உண்டாக வாய்ப்பு உள்ளது என்ற கருத்து முன்வைக்கப்பெற்றது. அதன் முக்கியத்துவமும் மூன்றாம் ஆண்டில் அமைவதின் பொருத்தப்பாடும் விவாதிக்கப்பெற்று, அப்பாடத்திற்கும் பிற பாடங்களைப்போலவே முக்கியத்துவம் வழங்கவேண்டும் என்பது வலியுறுத்தப்பெற்றது.

பாடங்கள் தொடர்பான பல்வேறு களப்பயணங்கள் துறையில் மேற்கொண்டு வருவன குறித்தும் அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்து தரும் கல்லூரி நிர்வாகம் மற்றும் முதல்வருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

ஒரு பருவத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் நடைபெறும் மூன்று அகமதிப்பீட்டுத் தேர்வுகளில் ஒன்று கட்டாயமாக செயல்பாட்டுவழி தேர்வாக அமைப்பது பயனுள்ளதாகவும் மாணவர்களின் ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் மிகுவிப்பதை அறியமுடிகிறது. எனவே செயல்வழித் தேர்வுகள் தக்கவகையில் மிகுதிப்படுத்த பரிந்துரைக்கப்பெற்றது. குறிப்பாக, மொழிப்பாடத்தில் மொழிப்பயிற்சியை மட்டுமே ஒரு தேர்வாக நடத்தலாம். நேர்காணல்,



15/11

Scanned with OKEN Scanner

மேடைப்பேச்சு, செய்தித்தாள் வாசிப்பு, அறிக்கை தயாரித்தல், நூல் மதிப்புரை வழங்குதல், கவிதை, கதை, நாடகம் முதலான படைப்பாக்கம் ஆகிய பல நிலைகளில் ஒன்றை, செய்ய வைத்து அதனை மதிப்பிட்டு அகமதிப்பீட்டில் இணைத்துக்கொள்வது சிறந்தமுறை எனப் பரிந்துரைக்கப்பெற்றது.

வாரம் ஒரு முறை ஒரு மணிநேரமேனும் மாணவர்களை கல்லூரி மற்றும் துறை நூலகத்திற்கு கட்டாயம் செல்லும் வகையில் அட்டவணை தயாரிக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. பாடம் தொடர்பான நூலகப்பணி என்ற நிலையில் பகுதி அளவிலான மாணவர்களை நூலகத்திற்கு அனுப்புவது, அதை மதிப்பிடுவது அவசியம் என வலியுறுத்தபெற்றது.

கல்வி கற்றல் வகுப்பறையோடு நின்று விடாமல், மாணவர்களுக்கு பாடம் சார்ந்த அறிவினைப் பல்வேறு நிலைகளில் பெற வைக்கும்வகையில் தமிழ்த் துறையில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இப்பருவத்தில் நடந்த நிகழ்வுகளும் அவற்றின் எண்ணிக்கைகளும் பின்வருமாறு அமைகின்றன.

1. ஆய்வரங்கம் – 5 நிகழ்வுகள்
2. அறிவன் வட்டம் – 11 நிகழ்வுகள்
3. பொற்றாமரை மன்றம் – 3 நிகழ்வுகள்
4. திரைவெளி – 4 நிகழ்வுகள்
5. கணித்தமிழ் பேரவை – 1 நிகழ்வு

இந்நிகழ்வுகள் மாணவர்களைப் பல்பரிமாணங்களுடன் வளர்ப்பதிலும் அவர்களின் கவனத்தை ஈர்ப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன எனக் குழு உறுப்பினர்களால் பாராட்டப்பெற்றன.

சென்ற ஆண்டு, சைவசித்தாந்தம் பட்டயப்படிப்பு நேரடியாகவும் இணையவழியாகவும் நடத்தப்பெற்றது. 129 பேர் கலந்துகொண்டு பயின்றார்கள். மேலச்சிவபுரி செந்தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வர் **முனைவர் பழ. முத்தப்பன்**, மயிலம் தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வர் **முனைவர் சு. திருநாவுக்கரசு,** தஞ்சை - தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் **முனைவர் கோ.ப. நல்லசிவம்,** விருதாசலம் திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் **முனைவர் கி. சிவகுமார்,** திருவையாறு அரசர் கல்லூரி தமிழ்த்துறை மேனாள் பேராசிரியர் **முனைவர் ச. திருஞானசம்பந்தம்,** திருவாவடுதுறை ஆதீன சித்தாந்த ஆசிரியர் கோவை **மீ. சிவசண்முகம், புலவர் சு. சதாசிவம், புலவர் சரவண. சதாசிவம்** உள்ளிட்ட பல துறைபோகிய வல்லுநர்கள், சித்தாந்த வகுப்புகளை நடத்திக்கொடுத்தார்கள். இதனால் உலகம் தழுவிய நிலையில் பல மாணவர்களும் பெரும்பயனடைந்தனர்.



15/11

Scanned with OKEN Scanner

அதே போல, இந்த ஆண்டு மதிப்புக்கூட்டு பாடமாக *(value added program)*, மரபிசை என்ற சான்றிதழ்ப்படிப்பு 12.08.2022 முதல் வியாழன் தோறும் நடத்தப்பெற்றுவருகிறது. இப்பாடங்களை, தஞ்சை - தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் **முனைவர் கோ.ப. நல்லசிவம்**, சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறை பேராசிரியர் **முனைவர் ஹேமலதா**, திருச்சி கலைக்காவேரி கவின்கலைக் கல்லூரி பேராசிரியர்கள் **முனைவர் பானுமதி**, **முனைவர் உமாமகேஷ்வரி**, அரசு இசைப்பள்ளி ஆசிரியர் **சிவ.இராஜபதி**, ஓதுவாமூர்த்திகள் திருமதி **ரேவதி கிருஷ்ணமூர்த்தி**, திருமதி **சாரதா சுப்பிரமணியம்**, திரு. **அ. வளவன்**, திரு. **ஸ்ரீராம்**, செல்வி. **சுபாஷினி** உள்ளிட்ட பல துறைபோகிய வல்லுநர்கள் நடத்துகிறார்கள்.

மேலும், தமிழ்த்துறை மாணவர்களுக்குத் தொடர்ந்து நடத்திவருவது போலவே இந்த ஆண்டும், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையத்துடன் இணைந்து சுவடியியல் சான்றிதழ்ப் படிப்பையும், ஓசூர் – கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வு மையத்துடன் இணைந்து கல்வெட்டியல் சான்றிதழ் படிப்பையும் இருமைப்பருவத்தில் நடத்த முடிவுசெய்யப்பெற்றது.

**Signature of Members:**

**Dr. G. PALANI** - [signature]

**Dr. J. RADHAKRISHNAN** - [signature]

**Dr. G. JAYASHREE** - [signature]

**Mr. S. NEELAMEGAN** - [signature]

**Dr. N. APPADURI** - [signature]

**Dr. M. ANBAZHAGAN** - [signature]

**Mr. K. SARAVANAN** - [signature]

**Dr. K.R. VENKATESAN** - [signature] 15/11/22



Scanned with OKEN Scanner